DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -15

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. பிரகாஷ் | Caste: | |
| Father's Name: | திரு. ராமு | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |
| Date | : | | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 26th day of July - 2023.

**A1 and A3 to A5 present. A6 absent. He is represented by counsel.**

**26.07.2023.**

**முதல் விசாரணை**

நான் பெரியபுத்தூரில் வசித்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் புரோக்கராக தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இதற்கு முன்பாக அவர்களை நான் பார்த்ததில்லை. இறந்துபோன விஜயனை எனக்கு தெரியாது. இப்போதிலிருந்து 10 வருடங்களுக்கு முன்பாக விஜயன் இறந்துவிட்டார் என்று பத்திரிக்கை செய்தி வாயிலாக தெரிந்துகொண்டேன். விஜயன் இறப்பதற்கு சுமார் 2 வருடங்களுக்கு முன்பாக முருகன் என்பவர் என்னை ரியல் எஸ்டேட் தொழிலுக்கு இடம் காண்பிப்பதற்கு பூலாவரி ஆத்துக்காடு வழியாக அழைத்து சென்றார்.

என்னுடன் இடம் பார்ப்பதற்காக 4, 5 பேர் வந்திருந்தார்கள். நாங்கள் இறந்துபோன விஜயன் என்பவர் குடியிருக்கும் இடத்திற்கு அருகிலுள்ள ரோட்டின் வழியாக சென்றோம். அவர் குடியிருக்கும் இடத்திலிருந்து சுமார் 1/2 கி.மீ தொலைவில் வண்டியை நிறுத்தி ஒரு பாலத்தின் அருகில் உள்ள தென்னந்தோப்பை பார்த்தோம்.

அந்த தோப்பை முருகன் என்பவர் எங்களுக்கு காண்பித்தார். அந்த இடத்து சம்மந்தமாக இடத்துக்காரர்களுக்கிடையே பிரச்சனை இருப்பதாகவும், நீங்கள் வேண்டுமென்றால் அதனை பாருங்கள் என்று முருகன் என்னிடம் சொன்னார். அந்த இடத்தை பார்த்து விட்டு நாங்கள் போய்விட்டோம். அந்த இடத்து சம்மந்தப்பட்டவர்களிடம் நாங்கள் எதுவும் பேசவில்லை, பார்க்கவும் இல்லை. விஜயன் இறந்தது சம்மந்தமாக பத்திரிக்கை செய்தி வந்ததிற்கு பின்னிட்டு சுமார் ஒருமாதம் கழித்து போலிசார் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்து சென்று எதற்காக அந்த இடத்திற்கு போனீர்கள் யார் யார் போனீர்கள் என்று விசாரித்தார்கள். 2, 3 தினங்கள் போலிசார் என்னை காவல்நிலையத்திற்கு வரச்சொல்லி விசாரித்தார்கள். நான் நடந்ததை சொன்னேன்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலிசார் விசாரணையில் நான் தேங்காய் லோடு ஓட்டும் முருகன் என்பவர் மூலம் 1ஆம் எதிரியை எனக்கு பழக்கம் என்றும், நானும் சுந்தரமூர்த்தியும் அடிக்கடி பேசி பார்த்து நண்பர்களாக பழகிவந்தோம் என்றும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

16.11.2014 ஆம் தேதிக்கு சுமார் ஒருவருடத்திற்கு முன்பாக சுந்தரமூர்த்தி தன்னுடைய காட்டை விற்கபோவதாக என்னிடம் சொன்னார் என்றாலும், வில்லங்கம் எதுவும் இல்லாமல் இருந்தால் அதனை நல்லவிலைக்கு விற்று தருவதாகவும் நான் சொன்னன் என்றாலும் சரியல்ல. முருகனிடம் தான் சொன்னேன். முருகன் அவருக்கு தெரிந்தவர் காட்டை விற்கபோவதாக என்னிடம் சொன்னார். முருகனுக்கு தெரிந்த அந்த நபரின் பெயர் எனக்கு தெரியாது.

சுந்தரமூர்த்தி என்னிடம் நிலத்தில் பிரச்சனை இருப்பதாகவும் கேஸ் இருப்பதாகவும், அந்த பிரச்சனையை பேசி தீர்க்கமுடியாது என்றும், பிரச்சனை செய்பவரையே தீர்த்து கட்டினால் தான் பிரச்சனை முடியும் அதற்கு என்ன செலவு

ஆனாலும் பராவாயில்லை என்று சுந்தரமூர்த்தி என்னிடம் சொன்னதாகவும், நான் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. நான் அப்படிப்பட்ட ஆள் இல்லை என்று சொல்லிவிட்டு போய்விட்டேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் 03.09.2014 அன்று விஜயன் கொலை செய்தியை பத்திரிக்கையில் பார்த்தபோதே சுந்தமூர்த்தி தான் அவரை கொலை செய்திருப்பார் என்று நான் முடிவு செய்துவிட்டதாகவும், ஆதாரம் இல்லாமல் எதுவும் சொல்லக்கூடாது என்று இருந்துவிட்டதாகவும், சுந்தரமூர்த்தியும் அவரது கூலிபடையினரும் நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டதாக கேள்விபட்டதற்கு பிறகு எனக்கு தெரிந்த சங்கதிகளை ஆய்வாளர் விசாரணையில் சொன்னதாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

போலிசார் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து கொண்டு உண்மை சங்கதிகளை மறைத்து பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்பட்டது.</u>

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Sd/- G. Sri Rama Jeyam,
III Additional District Judge,
Salem.